Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Issue - 2, May 2023 E-ISSN: 2583-0481

# A Comparative Study of *Thirukkural* and Tholkappiya Porulathikaram in Internal Perspective

**Dr. S. Santhi**, Assistant Professor of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-7579-9302
**DOI: 10.5281/zenodo.7981569**
**Received** 15 March 2023; **Revised form** 12 April 2023; **Accepted** 22 April 2023; **Available online** 26 May 2023.

## Abstract

*The ancient Tamils have divided the heroic life of force and philanthropy, and the love life of a man and a woman together into internal and external life. It is possible to know that the chastity of marriage is only after the husband and wife have fallen in love and married, "Velipada Varaithal Padamai Varaitthal Endru, Aayirandenba Varaithal Aare (Kalavu – 50)" (Kalavu-50). The heart of the son who realizes the truth and the parents who have the right to give have lived a noble life as the leader who is entitled to give and receive. Thus, there is no doubt that "Tolkappiyam" is a treasure of noble ideas that highlights the concepts of love, heroism, friendship, civilization, industry, etc. "Thirukkural" is not only one of the eighteen books listed below, but it is also important to keep it as a moral book. These are the common views in both of these books. The purpose of this article is to analyze them comparatively.*

**Keywords:** Internal Life, Tholkappiya Porulathikaram, *Thirukkural*, Comparison.

## References

[1] Tamilannal., (U.A.). *Tholkappiyam Porulathikaram*. Meenakshi Puthaga Nilayam, Madurai. First Edition - 2010.
[2] Narayanavelu Pillai, M. (U.A.) *Thirukkural.* Narmada Publication, Chennai, First Edition - 2006.
[3] Sivagnanam, M. B., Silampuch Selvar. *Tamilar Thirumanam*. Oviya Pathipagam, Chennai, First Edition - 2009.
[4] Puliyurg Kesikan, (U.A). *Akananooru.* Sri Senpaka Pathipagam, Chennai, First Edition - 2010.
[5] Bhakyamery. *Tamilar Panpatum Payanpatum.* Anchanachimizhi Pathipagam, Chennai, First Edition - 2006.
[6] Chidambaranar Samy. *Tolkappiyath Tamilar*. New Century Book House, Chennai, First Edition - 2002.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, இதழ் - 2, வைகாசி 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# அகக்கட்டமைப்பு நோக்கில் தொல்காப்பியப் பொருளதிகாரம் மற்றும் *திருக்குறள் ஒப்பீடு*

**முனைவர் செ. சாந்தி,** உதவிப்பேராசிரியர், இளநிலை தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-7579-9302
DOI: 10.5281/zenodo.7981569

**ஆய்வுச்சுருக்கம்**

*பண்டைத் தமிழர் படை,கொடை என வாழ்ந்த வீர வாழ்வை, ஆணும் பெண்ணும் கூடி வாழும் ஒன்று பட்ட காதல் வாழ்வை அகம், புறம் என்றவாறு பிரித்துள்ளனர். அகத்துள்ளும் களவு,கற்பு வகுத்து, ஒத்த தலைவனும் தலைவியும் காதல் கொண்டு களவு மணம் புரிந்த பின்னரே கற்பு மணம் புரிந்துள்ளனர் என்பதனை, "வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று, ஆயிரண்டென்ப வரைதல் ஆறே" (களவு-50) என்ற நூற்பா வழி அறிய முடிகிறது. குறியிடத்தைத் தேர்தல், சம்மதத்தைக் கண்களால் வெளிப்படுத்துதல், தலைவியின் மெய்பாட்டினை உணர்ந்த தலைமகனின் உள்ளக்கிடக்கை மற்றும் கொடுத்தற்கு உரிமையுடைய பெற்றோர் கொடுக்கப் பெறுதற்குத் தகுதியுடைய தலைவன் பெற நிகழும் கரணம் எனச் செம்மையுற வாழ்ந்துள்ளனர். இவ்வாறாக காதல், வீரம், நட்பு, நாகரிகம், தொழில் முதலான கருத்துகளை எடுத்துரைக்கும் கருத்துப் பெட்டகமாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறள் அறநூல் மட்டுமன்று அது அகநூலாகவும் வைத்து இன்புறத்தக்கது.மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வாழ்வியல் களஞ்சியமாகவும் தனிமனித வாழ்வைக் காட்டும் தகைசான்ற நூலாகவும் சமூக வாழ்வியலைச் சித்தரிக்கும் வழிகாட்டி நூலாகவும் திகழ்கின்றது. இவ்விரு நூல்களுள்ளும் ஒருமித்த கருத்துக்கள் பரவிக்கிடக்கின்றன. அவற்றை ஒப்பீட்டு நோக்கில் பகுத்தாய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** அகக்கட்டமைப்பு, தொல்காப்பியப் பொருளதிகாரம், திருக்குறள், ஒப்பீடு.

**முன்னுரை**

தமிழின் மிகத் தொன்மையான இலக்கண நூலாகவும் பழந்தமிழரின் அகப்புற வாழ்வினை,மனித வாழ்வியலின் கட்டமைப்பு முறைகளைக் அறியக்கிடக்கும் கருவூலமாகவும் தொல்காப்பியம் திகழ்கின்றது. தனி மனித ஒழுக்கத்தையும், சமுதாய ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்கும் நூலாகத் திருக்குறளும் திகழ்கின்றது.இவ்விரு நூல்களுக்குள்ளும் பொருண்மை அடிப்படையில் ஒற்றுமைகள் விரவிக்கிடக்கின்றன. அவற்றை அகக்கட்டமைப்பு நோக்கத்துடன் ஆராய்வதே இதன் நோக்கமாக அமைகின்றது.

**அகவுணர்வும் அகவாழ்வும்**

உள்ளத்துள் நிகழும் இன்ப உணர்வினைப் பிறர்க்குப் புலனாகா வண்ணம் மறைக்கத்தக்கது அகம் எனப்பட்டது. இதில் தலைவன், தலைவியின் பெயர்கள் சுட்டப் பெறாமையாலே அகஇலக்கியங்கள் தனித்துவம் பெற்றனவாகத் திகழ்கின்றன.

**மக்கள் நுதலிய அகனைந் திணையும்**

**சுட்டி ஒருவர்ப் பெயர்கொளாப் பெறாஅ (தொல்.பொருள்., தொகுதி-1, நூ - 1000)**

தலைமக்களிடத்துத் தோன்றும் காதலுணர்வு நட்பு என்றே சுட்டப்படுகின்றது. வள்ளுவரும்,

**உடம்போடு உயிரிடை என்னமற்று அன்ன**

**மடந்தையோடு எம்மிடை நட்பு. (குறள் - 1122)**

என்று காதலை நட்பு என்றே சுட்டுகின்றார். அவ்வாறு ஈர்க்கப்படும் தலைமக்கள் ஒத்த பண்புடையவர்களாக இருக்க வேண்டும் என்பதனைப் பத்துப் பொருத்தங்கள் அமைத்து வரையறை செய்ததோடு, இருவருள்ளும் தோன்றும் அகவுணர்வினைக் களவு, கற்பு என்றும் வகைமைப்படுத்தினர்.

**களவு வாழ்வு**

ஒருமித்தத் தலைமக்களிடம் திருமணத்திற்கு முன்பு தோன்றும் நட்பு களவு எனப்படும். இது நல் ஊழின் காரணமாக நிகழும். களவு, மறை, காமக்கூட்டம் என்பன ஒத்தப் பொருளுடைய வெவ்வேறு சொற்களாகும்.தங்களது காதலுணர்வினைத் தலைமக்கள் பிறர் அறியா வண்ணம் மறைக்க முயல்வதால் இது ‘மறைந்து செய்யும் களவு’எனப்பட்டது. இதனை வள்ளுவர் ‘கண் களவு கொள்ளும் சிறுநோக்கம்’ (குறள்-1092)என்றவாறு குறிப்பிட்டுள்ளார். தமிழ்ப் பண்பாட்டின்வழி களவெனப்படுவது, கற்பு நோக்கியது. கற்பில் முடியாதது களவு ஆகாது என்பார் தமிழண்ணல். ‘ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது. களவு நாடு அறி நன்மணமாக அமைய வேண்டும்’என்பது நச்சினார்க்கினியர் கூற்றாகும். களவு என்பதைத் தீது என்று உலகத்தார் ஒதுக்கினர். ஆனால் தலைமக்களிடத்துத் தோன்றும் களவு இன்பம் கருதியது என்பதால் பொருளால் சிறப்புற்று அறவழிப்பட்டதாக அனைவராலும் ஒப்பி ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மறையோதும் அந்தணர்கள் குறிப்பிடும் எட்டு வகைத் திருமணத்துள் அதாவது,காந்தர்வ மணத்தோடு களவு ஒப்புமையுடைதாக எடுத்துரைக்கும் பாங்கினைக்,

**காமக் கூட்டம் காணுங்காலை**

**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**

**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே. (தொல்., நூ - 1038)**

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம். காட்சி, ஐயம், தெரிவு, தெளிவு என்பதன் அடிப்படையில் களவு தொடக்கம் பெறுகின்றது. தலைவியை முதன்முதலில் கண்ணுறும் தலைவனுக்கு இவள் பேரழகுடையவள், தெய்வ மகளாக இருப்பாளோ என்று ஐயுறத் தோன்றுகின்றது. பின்பு,

**வண்டே இழையே வள்ளி பூவே**
**கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று**
**அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ**
**நின்றவை களையும் கருவி என்ப. (தொல், நூ - 1041)**

தலைவி சூடிய பூவில் வண்டுகள் மொய்த்தல், அவள் உடம்பில் எழுதப்பெற்ற ஓவியங்கள்,பூ வாடியிருத்தல், மருண்ட கண்களும் இமைகளும், அச்சவுணர்வு என்று அவளிடம் காணப்பட்ட குறிப்புகளைக் கண்டு இவள் மானுட மகளே எனத் தெளிவுறுகிறான். இதனை வள்ளுவரின்,

**அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. (குறள் - 1081)**

திருக்குறளோடு ஒப்பிட்டு நோக்கலாம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. தலைவி தன் மனதில் தோன்றும் குறிப்பினைத் தன் கண்களின் வழியாகவே தெரிவிக்கிறாள். காமத்தைக் கண்களே சொல்லும் அவ்வாறு சொல்லாத கண்கள் கண்களே இல்லை. அப்போது கண்ணின் மணிகளாக நாணமும் மடப்பமும் விளங்கும் என்கிறார் தொல்காப்பியர்.

**காமம் சொல்லா நாட்டம் இன்மையின்**
**ஏமுற இரண்டும் உளஎன மொழிப. (தொல், நூ - 1055)**

என்ற நூற்பாவினை, ‘நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள்’ (குறள்-1093) என்பதன் வழியும்

**யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும். (குறள் - 1094)**

என்ற திருக்குறளின் வழியாகவும் ஒப்பு நோக்கலாம்.மேலும் தலைவி தன் காதல் வேட்கையை வாய்விட்டுக் கூறமாட்டாள் மெய்பாட்டின் மூலமே உணர்த்துவாள் என்பதனைத்,

**தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை. (தொல், நூ - 1055)**

எனும் தொல்காப்பியக் கூற்றினைக்,

**குறிகொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும். (குறள் - 1095)**

என்ற திருக்குறளோடு பொருத்திப் பார்க்க இடமுண்டு. தலைமக்களைக் கற்பு வாழ்விற்குத் தூண்டும் காரணிகள் அம்பலும் அலருமாகும். ‘அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பு’ (தொல்-1109) தனக்குப் பழக்கப்பட்ட குறியிடத்தைத் தலைவியே தீர்மானித்தாலும் தலைவனது வருகை,செயல் ஊராரிடத்து அலராக வெளிப்படுகின்றது. இக்கருத்தினை அடியொற்றியே வள்ளுவரும் களவியலின் இறுதி அதிகாரத்தை ‘அலர் அறிவுறுத்தல்’ என்று அமைத்திருப்பது இவண் நினைவு கூரத்தக்கதாகும். தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்துதர பெண் வீட்டார் மறுக்கின்ற போதும் இன்னபிற காரணங்களால் தலைமக்களின் காதல் வாழ்வு கைகூடாதபோதும் தலைவன் மடலேறுவதாக அச்சுறுத்துவான். அதற்கு அஞ்சிப் பெற்றோரும்

உற்றாரும் அவ்விருவருக்கும் மணம் செய்துவைப்பர். இம்மடலேறுதல் தலைவனுக்கு மட்டுமே உரியது. தலைவிக்கு மடலேறும் உரிமை கிடையாது. 'இதனை ஏறிய மடல்திறம்' (நூ - 997) என்றவாறு *தொல்காப்பியம்* சுட்டுகிறது.

**கற்பு வாழ்வு**

களவு ஒழுக்கத்தில் வாழ்ந்த தலைமக்கள் ஊரறியத் திருமணம் செய்து கொண்டு வாழும் வாழ்வு கற்பு எனப்படுகின்றது. "திருமணம் என்பது மணமக்களின் பெற்றோர், உறவினர் ஆகிய எல்லோரும் மனமொப்பி நடத்தும் புனித நிகழ்ச்சி" என்று தமிழர் திருமணம் நூலில் ம.பொ.சி கூறியுள்ளார். *தொல்காப்பியம்* இதனைப் பின்வருமாறு சுட்டுகின்றது.

**கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**
**கொள்குறி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொடுப்பதுவே. (தொல், நூ - 1088)**

திருமணத்தில் நிகழ்த்தப்படும் சடங்கு முறைகளைக் கரணம் என்றனர். அது கொடுத்தற்கு உரிமையுடைய பெற்றோர் கொடுக்கப் பெறுதற்குத் தகுதியுடைய தலைவன் பெற நிகழ்வது ஆகும்.மேலும, கரணம் என்பதே பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் தந்தை,தமையன்மார் கொண்டு நிகழ்த்தப் பெற்றது என்கிறார். இக்கரணத்தில் புரோகிதர் இல்லை.

**தண் பெரும் பந்தர்த்தரு மணல்**
**மனை விளக்குறுத்து மாலை தொடரி**
**கனை இருள் அகன்ற கவின்பெறு காலை**
**...முதுசெம் பெண்டிர் முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தர**
**புதல்வர் பயந்த திதலை அவ்வயிற்று**
**வால் இழை மகளிர் நால்வர் கூறி**
**கற்பினின் விழாஅ நாற்பல உதவிப்**
**பெற்றோர் பெட்கும் பிணையை ஆக. (அகநானூறு, பா - 86)**

என்ற அகநானுற்றுப் பாடல்வழிப் புரோகிதரின்றி முதுபெண்டிர் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதை அறிய முடிகின்றது.

**திருமணச் சடங்குகளில்லாமல் அதாவது புரோகிதரில்லாமல் நடத்துவோர்க்குப் பேச்சுச் சடங்கை நிகழ்த்தி,திருமணத்திற்கு வந்திருப்பவர்களைத் திருப்தி படுத்த வேண்டியிருக்கும். என்பார் ம.பொ.சி. (தமிழர் திருமணம், ப - 71)**

**தாலி அணியும் வழக்கம் பண்டைத் தமிழர் வழக்கமில்லை.தமிழர் திருமண முறை அனைத்தையும் வரிசையாகத் தெரிவிக்கும் நல்லாவூர் கிழார், பண்டைத் தமிழர் திருமணத்தில் தாலி அணியும் வழக்கம் பற்றிக் கூறினார் அல்லர். இதன் வாயிலாக ஆண்,பெண்ணுக்குத் தாலி பூட்டி அடிமை கொள்ளும் பழக்கம் பண்டைத் தமிழரிடம் இல்லாமல் இருந்தது. (தமிழர் பண்பாடும் பயன்பாடும், ப - 100)**

“கரணமும் அதன்வழி மணமானவரை ஆகாதவரினின்றும் வேறுபடுத்தும் அடையாளங்களும் சமுதாயப் பெரியோர்களால் உருவாக்கப்பட்டன” என்பார் வ.சுப.மாணிக்கம். தலைமக்கள் கற்பு வாழ்க்கைக்கு உடன்பட்ட பின்னர் செவிலி, தோழி, பார்ப்பார், அறிவர் எனப் பலரும் அறிவுரை வழங்கி, ஓதல், பகை,தூது காரணமாகத் தலைவன் பிரிந்த போது தலைவிக்கு ஆறுதல் கூறித் தேற்றுகின்றனர். இவை மட்டுமின்றித் தலைவன் பரத்தை மாட்டும், பொருள் ஈட்டவும் பிரிந்த போது தலைவியைத் தாய்போலத் தேற்றி அவளைத் தாங்கும் பெரும் அரணாகத் தோழி விளங்குகிறாள். தலைவனோடு தான் கூடிக்களித்திருந்த போது தான் பெற்ற இன்பத்தையும் பிரிந்த போது தான் உற்றத்துன்ப உணர்வுகளையும் கூறும் தலைவி தன் நெஞ்சோடு கிளத்தலாகவே வெளிப்படுத்துகிறாள்.

**அவன் குறிப்பு அறிதல் வேண்டியும் கிழவி**
**அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்**
**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே. (மேலது, நூ - 1105)**

அதாவது,தலைவனின் உள்ளக்குறிப்பினை அறியவும் தன் ஊடல் நீங்கவும் தன்னை வேறு ஒருத்தி போல வைத்துப் பேசும்முறை காணப்படுகின்றது. இதனைத் திருக்குறள்,

**உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சே. (குறள் - 1200)**

என்று தலைவி தன் நெஞ்சோடு கிளப்பதாகவும்,தலைவனைக் கண்ணே அடையாளம் காட்டியதால் அவன் பிரிந்தபோது நிகழும் துன்பியல் கூற்றுகளைக் கண்களோடு கிளப்பதாகக் கூறியுள்ளது.இவைகள் மட்டுமின்றி இல்லறம் நடத்தும் தலைமக்கள் ஆற்ற வேண்டிய இல்லறக் கடமைகளைத் தொல்காப்பியம்,திருக்குறள் ஆகிய இரு பெரும் நூல்களும் எடுத்துரைக்கின்றன. இவ்விருவருள்ளும் தலைவிக்கே பொறுப்புகள் அதிகமாக தரப்படுகின்றன. இதனைப்

> **பெற்றோரும் மற்றோரும் கற்பித்த நல்லுரைகளை மறவாது பின்பற்றுதல் காதலனிடம் அன்பு காட்டுதல் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளுதல்,இளகிய நெஞ்சுடன் பொறுமை காட்டுதல்,இரகசியங்களை ஒருவருக்கும் உரைக்காமல் உள்ளத்திலே நிறுத்தி வைத்துக் கொள்ளுதல்.இயன்றவாறு விருந்தினர்களை உபசரித்தல்,தன்னைச் சூழ்ந்திருப்போரையும் சூழ்ந்திருக்கும் பொருள்களையும் பாதுகாத்தல்,இவைகள் எல்லாம் இல்லாளுக்கு வேண்டிய இன்றியமையாத குணங்கள்.அதுவே சிறந்த கற்பாகும். (தொல்காப்பியத் தமிழர், ப - 139)**

என்று சிதம்பரனார் கூறியிருப்பது சற்று சிந்திக்கத்தக்கதாகும்.

**முடிவுரை**

களவொழுக்கம் தீதுடையதன்று. அது அறவழிப்பட்டதாகும். கற்பொழுக்கம் என்பது அறவோரைப் பேணும் மனவழிப்பட்டதாகும். இவ்விரு ஒழுக்கத்திலும் தோழி, செவிலியின்

பங்கு அளப்பரியது ஆகும். பண்டைத் தமிழரின் திருமணச் சடங்குகளில் வேதம் ஓதுதல்,வேள்வி செய்தல், தீ வலம் வருதல் முதலான ஆரியச் சடங்குகள் இல்லாமல், புதல்வரைப் பெற்ற முதுபெண்டிர் முன்னிலையில் நடத்தப்பெற்றிருக்கின்றது.இது பண்டைத் தமிழர்கள் பின்பற்றிய பெண்வழிக் சமூக மரபை அடையாளப்படுத்துகிறது. ஆணுக்கும் பெண்ணுக்குமான இல்லறக் கடமைகளில் பெண்ணுக்கே பெரும் பங்கு உண்டு.

**துணைநூற் பட்டியல்**

[1] தமிழண்ணல்., (உ.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதல் பதிப்பு - 2010.

[2] நாராயணவேலுப் பிள்ளை. எம்., (உ.ஆ). *திருக்குறள்.* நர்மதா வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு - 2006.

[3] சிவஞானம், ம. பொ., சிலம்புச் செல்வர். *தமிழர் திருமணம்.* ஓவியா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2009.

[4] புலியூர்க் கேசிகன், (உ.ஆ). *அகநானூறு.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2010.

[5] பாக்கியமேரி. *தமிழர் பண்பாடும் பயன்பாடும்.* அஞ்சனச்சிமிழ்ப் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2006.

[6] சிதம்பரனார். சாமி. *தொல்காப்பியத் தமிழர்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு - 2002.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.